## பாடம் - 8

**லாயிலாஹ இல்லல்லாஹ்வின் நிபந்தனைகள்(தொடர்ச்சி)**

## الدرس الثامن

**تابع شروط لا إله إلا الله**

**6.**வாய்மை: மனிதன் தனது செயல்களை தூய எண்ணத்தைக் கொண்டு ஷிர்க்கின் சாயல் படிந்த அனைத்தை விட்டும் தூய்மைப்படுத்துவதாகும். இது எவ்வாறெனில் சொல், செயல்கள் அனைத்தும் அவனிடமிருந்து அல்லாஹ்வின் திருமுகத்துக்காக என தூய எண்ணத்துடனும் அவனது திருப்பொருத்தத்தை நாடியும் ஏற்படவேண்டும். அதில் முகஸ்துதி, பிறர் பாராட்ட வேண்டுமென்ற நோக்கம், பலனை எதிர்பார்ப்பது, சுயநலன், வெளிப்படையான அல்லது மறைமுகமான மனஇச்சை, அல்லது அல்லாஹ்வின் வழிகாட்டுதல் இன்றி ஒரு மனிதனின் பிரியத்திற்காகவோ, ஒரு மத்ஹபுக்காகவோ, ஒரு கட்சிக்குக் கட்டுப்படுவதற்காகவோ ஒரு செயலைச் செய்வது போன்ற எந்தக் கலப்படமும் இருக்கக்கூடாது. எனினும் அவன் தனது செயல் மூலம் அல்லாஹ்வின் திருமுகத்தையும் மறுமையையும் நாடுபவனாக இருப்பது அவசியமாகும். மனிதர்களில் எவரது பிரதிபலனுக்கோ நன்றி பாராட்டுதலுக்கோ தனது உள்ளத்தில் இடமளித்துவிடக் கூடாது. அல்லாஹ் கூறுகிறான்:

﴿ أَلَا لله الدِّينُ الخَالِصُ ﴾ ﴿الزمر: ٣﴾

அறிந்து கொள்வீராக! தூய்மையான இம்மார்க்கம் அல்லாஹ்வுக்கே உரியது. (39:3)

﴿ وَمَا أُمِرُوا إِلَّا لِيَعْبُدُوا اللهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ ﴾ ﴿البينة: ٥﴾

வணக்கத்தை அல்லாஹ்வுக்கே தூய்மையாக்கிய வர்களாக அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும் என்றே அவர்கள் ஏவப்பட்டுள்ளார்கள். (98:5)

عِتبان قوله ﷺ: (( فإنَّ الله قد حَرَّم على النار من قال لا إله إلا الله ، يبتغي بذلك وجه الله )) ﴿متفق عليه: ٤٢٥ ، ٣٣﴾

அல்லாஹ்வின் திருமுகத்தை நாடி லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கூறியவருக்கு அல்லாஹ் நரகத்தை தடைசெய்துவிட்டான். என நபி(ஸல்)கூறியதாக இத்பான் (ரலி) அறிவிக்கிறார்கள்.(புகாரி-425, முஸ்லிம்-33)

**7.**நேசித்தல்: இம்மகத்தான கலிமாவையும் இதன் எதிர்பார்ப்பையும் இது எதை அறிவிக்கிறதோ அதையும் நேசிப்பதாகும். அந்த வகையில் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நேசிக்க வேண்டும். மற்ற எல்லாவற்றினுடைய நேசத்தை விட அவர்கள் இருவரின் நேசத்துக்கே முன்னுரிமை வழங்க வேண்டும். நேசத்திற்கு உரிய நிபந்தனைகளையும் அதற்கு அவசியமானவற்றையும் கடைபிடிக்க வேண்டும்.

ஆகவே கண்ணியப்படுத்துதல், மகத்துவப்படுத்துதல், பயப்படுதல், ஆதரவு வைத்தல் ஆகியவற்றுடன் அல்லாஹ்வை நேசிக்கவேண்டும். மக்கா, மதீனா, பொதுவாக எல்லா இறையில்லங்கள் போன்ற அல்லாஹ் வுக்குப் பிரியமான இடங்களையும், ரமழான், துல்ஹஜின் முதல் பத்து நாட்கள் போன்ற அல்லாஹ்வுக்குப் பிரியமான காலங்களையும், நபிமார்கள், ரசூல்மார்கள், மலக்குகள், சத்தியவான்கள், உயிர்த்தியாகிகள், நல்லடியார்கள் போன்ற அல்லாஹ்வுக்குப் பிரியமான மனிதர்களையும் தொழுகை, ஜகாத், நோன்பு, ஹஜ் போன்ற அல்லாஹ்வுக்குப் பிரியமான செயல்களையும், திக்ர், குர்ஆன் ஓதுதல் போன்ற சொற்களையும் நேசிக்க வேண்டும்.

சொந்த விருப்பங்கள், ஆசைகளை விட அல்லாஹ் வின் விருப்பங்களுக்கு முன்னுரிமை தர வேண்டும். அல்லாஹ் வெறுப்பவற்றை வெறுப்பதும் இறைநேசமே. ஆதலால் இறைமறுப்பாளர்களையும், இறை நிராகரிப்பு, பாவம், இறைவனுக்கு மாறு செய்தல் ஆகியவற்றையும் வெறுக்க வேண்டும்.

﴿ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا مَنْ يَرْتَدَّ مِنْكُمْ عَنْ دِينِهِ فَسَوْفَ يَأْتِي اللهُ بِقَوْمٍ يُحِبُّهُمْ وَيُحِبُّونَهُ أَذِلَّةٍ عَلَى الْمُؤْمِنِينَ أَعِزَّةٍ عَلَى الْكَافِرِينَ يُجَاهِدُونَ فِي سَبِيلِ اللهِ وَلا يَخَافُونَ لَوْمَةَ لائِمٍ ﴾ ﴿المائدة:٥٤﴾

அல்லாஹ் கூறுகிறான்: நம்பிக்கை கொண்டோரே! உங்களில் யாரேனும் தனது மார்க்கத்தை விட்டு மாறி விட்டால் அல்லாஹ் வேறொரு சமுதாயத்தைக் கொண்டு வருவான். அவன் அவர்களை நேசிப்பான். அவர்களும் அவனை நேசிப்பார்கள். அவர்கள் நம்பிக்கை கொண் டோரிடம் பணிவாகவும் நிராகரிப்போரிடம் கடுமை யாகவும் இருப்பார்கள். அல்லாஹ்வின் பாதையில் போர் புரிவார்கள். பழிப்போரின் பழிச்சொல்லுக்கு அஞ்ச மாட்டார்கள். (5:54)